<u>**DEPOSITION OF WITNESS**</u>

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 161/2022**
**Prosecution Witness - PW9**

| | |
|---|---|
| Name | : Mr.A.Perumal |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.

(Accused present.)

<u>முதல் விசாரணை</u>–

நான் கடந்த 21.07.2020 அன்று மணவாளகுறிச்சி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மணவாளகுறிச்சி காவல் நிலைய குற்ற எண் 24/2020 பிரிவு 4 (1 ஏ) மற்றும் 4(1 i) TNP Act படி வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ய ஏற்கனவே இவ்வழக்கினே முதற்கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளர் பாஸ்கரண் என்பவரிட்ம கூறியது போல் என்னிடம் கூறியதால் நான் புதிதாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. 07.08.2020 அன்று KKMCH forensic tutor திரு.பெஞ்சமின் ஜெயராஜ் திருநெல்வேலி RFSL அறிவியல் அலுவலர் திரு.ஜேம்ஸ்அந்தோணி ராஜ் மற்றும் உதவியாளர் திரு.பாஸ்கரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலங்கள் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காண்பிக்க படும் ஆய்வறிக்கை தடய அறிவியல் ஆய்வகத்தில் கொடுக்க பட்டது அது அ.சா.11 ஆக குறியீடு செய்ய படுகிறது.

குறுக்கு விசாரணை

அ.சா.1 முதல் 4 பெயர்கள் காவல் நிலையத்தில் பணியாற்றுபவர்கள் என்றால் ஆமாம். அ.சா.4 கைப்பற்றிய மதுபானங்கள் வெவ்வேறு வகையானவை என்றால் ஆமாம். ஆனால் அதில் அத்தாட்சியில் எடுத்தது 2 பாட்டில்கள் மட்டும் என்றால் சேம்பிள் அனுப்பியது 2 பாட்டில்கள் அனைத்தும் அத்தாட்சியில் உள்ளது. ஒவ்வொரு வகை மதுவிற்கும் தனியாக பேட்ச் எண் இருக்கும் என்றால் ஆமாம். sample அனுப்பும் போது ஒவ்வொரு பேட்ச் ல் இருந்தும் அனுப்ப வேண்டும் என்றால் ஆமாம். நான் பணிபுரிந்த மணவாள குறிச்சி காவல் நிலையம் மற்றும் இந்த வழக்கு பதிவு செய்த மேற்படி காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட குளச்சல் சரக மதுவிலக்கு பிரிவிற்கு உட்பட்ட பகுதி என்றால் ஆமாம். இந்த வழக்கினை நான் மதுவிலக்கு பிரிவிற்கு அனுப்பவில்லை என்றால் ஆமாம். அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் இல்லை என்றால் யாரும் முன்வராததால் இருந்த நபர்களை சாட்சியாக போட்டோம். நாங்கள் சாட்சிகளை அழைத்து யாரும் வரவில்லை என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்ய படவில்லை என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் இந்த விவரம் உள்ளது. புள்ளி விவரத்திற்கு போட பட்ட வழக்கில் காவல் நிலையத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. அறிக்கையின் படி மனிதர்கள் முகர கூடிய அளவில் அட்ரோபின் உள்ளது என்றால் மனித உயிருக்கு ஆபத்தானது. அரசால் அனுமதிக்க பட்ட அளவு தான் உள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**